**பேருந்து அல்லது மின்பேருந்து (streetcar) ஒன்றில் ஓர் அவசரகாலநிலை ஏற்பட்டால் என்ன செய்வது**

- பேருந்து ஒன்றில் நீங்கள் இருந்தால், இயக்குநரை எச்சரியுங்கள்
- Streetcar ஒன்றில் நீங்கள் இருந்தால், இயக்குநருடன் பேசுவதற்குச் செய்தித்தொடர்புச் சாதனத்தைப் (intercom) பயன்படுத்துங்கள்
- பேருந்து மற்றும் streetcar இயக்குநர்களிடம் அலார அமைப்பு ஒன்றும் உதவிக்குரியவர்களை வரவழைக்கக்கூடிய இருவழி ரேடியோக்களும் உள்ளன.
- அவசரகாலநிலை ஒன்றின்போது, காவல்துறையினரின் அல்லது கடந்துசெல்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக,  ஒலியெழுப்பக்கூடிய எச்சரிக்கையையும் இயக்குநர்கள் இயக்கமுடியும். வாகனத்தின் வெளிப்புறத்திலுள்ள விட்டுவிட்டுப் பிரகாசமாக ஒளிரும் விளக்குகளையும் இயக்குநர் ஒருவர் ஒளிரச்செய்ய முடியும்

**Subway station (சுரங்கப்பாதை நிலையம்) ஒன்றில் ஓர் அவசரகாலநிலை ஏற்பட்டால் என்ன செய்வது**

- நிலையத்திலிருக்கும் கட்டணம் சேகரிப்போர் (Station Collectors), வாடிக்கையாளர் சேவை முகவர்கள், TTC விசேட காவலர்கள் மற்றும் மேற்பார்வைப் பணியாளர்கள் உதவுவதற்காக அங்கிருக்கின்றனர். TTC பணியாளர்களை அவர்களின் சீருடை மற்றும் TTC crest (அடையாளம்) மூலம் இலகுவாக அடையாளம் காணமுடியும்.
- சுரங்கப்பாதை மேடையில் (platform) காத்திருப்புக்கு என ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியிலும் (DWA) மின்உயர்த்திகளுக்கு அருகிலும் intercoms இருக்கின்றன. தேவைப்படும்போது, அவசரகாலநிலைக்குப் பதிலளிப்பவர்களைத் தொடர்புகொள்ளும் TTC பணியாளர்களுடன் intercom தொடர்புபடுத்துகிறது.
- தேவைப்பட்டால், தடங்களுக்கான மின்சக்தியை (track power) நிறுத்துங்கள். உதாரணத்துக்கு, ஒருவர் தண்டவாளத்தில் விழுந்துவிட்டார் அல்லது subway இன் கதவுக்குள் எவராவது சிக்கிக்கொண்டார், ஆனால், ரயில் நகர ஆரம்பிக்கிறது எனில், தடங்களுக்கான மின்சக்தியை நீங்கள் துண்டிக்கவேண்டும். அருகிலுள்ள Emergency Power Cut Cabinetக்குச் (அவசரகாலநிலை மின்சக்தித் துண்டிப்பு அலுமாரி ) செல்லுங்கள். சுரங்கப்பாதை மேடை ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு முனையிலும் அது இருக்கிறது; நீல விளக்கு ஒன்றினால் இது குறிக்கப்பட்டிருக்கும். அந்தப் பலகையில் (panel) உள்ள வழிமுறைகள், இரண்டு திசைகளிலும் உள்ள தடங்களுக்கான மின்சாரத்தை எவ்வாறு துண்டிப்பது என்பதைக் காட்டும்.

## Subway ஒன்றுக்குள் ஓர் அவசரகாலநிலை ஏற்பட்டால் என்ன செய்வது

- அவசரகாலநிலைக்கான மருத்துவ, காவல்துறை அல்லது தீயணைப்புச் சேவைகள் தேவைப்படும் சூழல் ஒன்று இருந்தால், மஞ்சள் நிற அவசரகாலநிலை எச்சரிக்கைப் பட்டையை அழுத்துங்கள். அவசரகாலநிலை எச்சரிக்கை என்பது ஜன்னல்களுக்கு மேலே, சக்கர நாற்காலிகளுக்கான இடங்கள் அருகே மற்றும் சுரங்கப்பாதை ரயிலின் கதவுகளுக்கு பக்கத்தில் அமைந்துள்ள மஞ்சள் நிறப் பட்டை ஆகும்.
- அவசரகாலநிலை அலாரம் இயக்கப்பட்டால், சுரங்கப்பாதை ரயில் அடுத்த நிலையத்திற்குச் செல்லும். Transit Controlஐ (போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பானவர்கள்) அலாரம் எச்சரிக்கும், அங்கிருக்கும் விசேட பயிற்சிபெற்ற பணியாளர்கள் நிலைமையை ஆராய்ந்து, தேவையுள்ளபோது, 9-1-1ஐத் தொடர்புகொள்ளவார்கள்.

## TTC இன் ஏனைய பாதுகாப்பு அம்சங்கள்

- சுரங்கப்பாதை நிலையத்தின் மேடைகள் அனைத்திலும், நிலைய நுழைவாயில்களிலும், பேருந்து மற்றும் streetcar களிலிருந்து ஒன்றுக்கு ஒன்று மாறும் (transfer) இடங்கள் பலவற்றிலும் பொதுமக்களுக்கான தொலைபேசிகள் அமைந்துள்ளன.
- அவசரகாலநிலையின்போது, 9-1-1 ஐ அழையுங்கள். 9-1-1க்கு அழைப்பது எப்போதும் இலவசமாகும். காவல்துறைக்கான, தீயணைப்புக்கான அல்லது மருத்துவத்தேவைக்கான அவசரநிலைகள் ஏற்படும்போது, 9-1-1 ஐ அழையுங்கள். அவசரகாலநிலை அழைப்புக்களுக்குப் பதிலளிப்பதற்கான பயிற்சிபெற்றவர்கள் உங்களுக்குத் தேவையான தகவல்களையும் உதவிகளையும் வழங்குவார்கள். நீங்கள் எவ்விடத்தில் இருக்கிறீர்கள் என்பது பற்றிய சரியான தகவல் ஒவ்வொரு தொலைபேசியின் அருகிலும் உள்ள அறிவித்தல் பலகையில் இருக்கும்.
- பாதுகாப்பைக் காட்டும் கண்ணாடிகள் போக்குவரத்து அமைப்பின் பல இடங்களில் அமைந்துள்ளன. மூலைகளையும், நிலையத்துடன் தொடர்பான ஒடுங்கிய பாதைகளையும் பரிசோதிப்பதற்கு அவை உங்களுக்கு உதவும்.
- SafeTTC பயன்பாட்டைப் பதிவிறக்குங்கள், குறுஞ்செய்தியை அல்லது இணையப் படிவத்தைப் பயன்படுத்தி நேரடியாக Transit Controlக்குச் செய்திகளை அனுப்புங்கள். Transit Control பதிலளிப்பதுடன், தேவைப்பட்டால் அவசரகால உதவியை அனுப்பும்.

**விரும்பும் இடத்தில் இறங்குவதற்கான கோரிக்கைத் திட்டம்**

- இரவு 9:00 மணிக்கும் அதிகாலை 5:00 மணிக்குமிடையில் தனியாகப் பேருந்தில் பயணிக்கும் வாடிக்கையாளர்கள் அனைவரும் விரும்பும் இடத்தில் இறங்குவதற்கான கோரிக்கைத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். பாதிக்கப்படலாமென உணரும், வாடிக்கையாளர்கள் எவரும் வழக்கமான TTC நிறுத்தங்களுக்கு இடையே பேருந்திலிருந்து இறங்குவதற்கு இது அனுமதிக்கிறது.
- விரும்பிய இடத்தில் இறங்கவிரும்பும் கோரிக்கையைக் குறைந்தபட்சம் ஒரு TTC நிறுத்தத்துக்கு முன்பாகக் கோர வேண்டும்.
- உங்களின் கோரிக்கையைப் பூர்த்திசெய்வதற்கு இயக்குநர் பேருந்தைப் பாதுகாப்பாக நிறுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.
- முன் கதவுகள் வழியாகப் பேருந்திலிருந்து வெளியேறுங்கள், பின் கதவுகள் மூடப்பட்டபடியே இருக்கும்.
- நினைவில் வைத்திருங்கள்: விரும்பும் இடத்தில் இறங்கும் கோரிக்கையை streetcars இல் செய்யமுடியாது. நடைபாதையிலிருந்து வெகு தொலைவில், சாலையின் நடுவில் streetcars பயணிப்பதால், அடையாளப்படுத்தப்படாத நிறுத்தத்தில் வாகனத்தைப் பாதுகாப்பாக நிறுத்தி வாடிக்கையாளர்களை இறங்கவிடுவது சாத்தியமில்லை.

**முறைப்பாடு செய்யுங்கள்**

குற்றச்செயல் ஒன்றினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், TTC பணியாளர், TTC விசேடக் காவலர் அல்லது ரொறன்ரோ காவல்துறை அதிகாரி ஒருவரிடம் உடனடியாக முறைப்பாடு செய்வது அவசியமாகும். சந்தேகத்திற்கிடமானவர் பற்றிய விபரங்கள், திகதி, நேரம், இடம் மற்றும் முடிந்தால் TTC வாகன இலக்கம் போன்ற சம்பவத்தைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்குங்கள்.
சந்தேகத்திற்கிடமான எதையாவது நீங்கள் கண்டால், சீருடை அணிந்த TTC பணியாளரிடம் முறையிடுங்கள்.

TTC நிலையங்களில் எவர் உதவலாம் என்பது பற்றிய வீடியோவைப் பாருங்கள்.

ஒரு சுரங்கப்பாதை ரயிலில் அல்லது ரயில் நிலையத்தில் அவசரகாலநிலை ஒன்றின்போது என்ன செய்யவேண்டும் என்பதை அறிவதற்கு வீடியோ ஒன்றைப் பாருங்கள்.